Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 227

திங்கட்கிழமை 11 ஜூலை 2022

ஆனி 27 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12 விலை : ரூ. 50

# கோத்தா விலகாவிட்டால் புதன்கிழமை ஹர்த்தால்

## தொழிற்சங்கங்களின் ஒன்றியம் அறிவிப்பு

**கொழும்பு, ஜூலை 11**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தான் தெரிவித்தவாறு நாளைமறுதினம் புதன்கிழமை பதவியிலிருந்து விலகாவிட்டால், முன்னறிவித்தல் இன்றி வேலைநிறுத்தம் மற்றும் முழுமையான கடையடைப்பில் ஈடுபடப்போவதாக தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.**

10 ➤

## அடுத்த ஜனாதிபதி யார்?

கரு ஜயசூரியா, சாலிய பீரிஸ், டலஸ் ஆகியோரின் பெயர்கள் முன்மொழிவு

கொழும்பு, ஜூலை 11
ஜனாதிபதி பதவி விலகும் நிலையில், தற்போதைய ஜனாதிபதியின் எஞ்சிய பதவிக் காலத்துக்கு நியமிப்பதற்கு ஒவ்வொரு கட்சிகளும் ஒவ்வொருவரின் பெயர்களைத் தேர்வு செய்து வருகின்றன.

10 ➤

கோத்தா, ரணில் விலகும் வரை

## கைப்பற்றிய மாளிகைகள் எங்களின் கட்டுப்பாட்டிலேயே!

சர்வகட்சி அரசாங்கத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை

போராட்டக்காரர்கள் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 11
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலகல் கடிதத்தை ஒப்படைக்கும் வரை, நாம் கைப்பற்றிய ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை என எந்தவொரு

10 ➤

அடுத்தது என்ன?

## கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று

கொழும்பு, ஜூலை 11
எதிர்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பான தீர்மானமிக்க கட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்று இன்று இடம்பெறவுள்ளது. சபாநாயகர் மஹிந்த

10 ➤

## தலையைச் சுற்ற வைக்கும் ஜனாதிபதியின் உணவு 'மெனு'

சேர்ட்டின் பெறுமதி 179 டொலர்

கொழும்பு, ஜூலை 11
ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றிய போராட்டக்காரர்கள் அங்கு ஒவ்வொரு இடமாக ஆராய்ச்சி

10 ➤

## சுற்றுலாத்தலங்களாக மாறிய மாளிகைகள்

மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகின்றன

கொழும்பு, ஜூலை 11
போராட்டக்காரர்கள் வசம் வீழ்ந்த ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன மக்களின்

10 ➤



## இலங்கை நிலைமையை உன்னிப்பாக அவதானிக்கிறோம்

என்கிறது சர்வதேச நாணய நிதியம்

விரிவு - பக். 03

## அமைச்சர் தம்மிக்கவும் பதவியைத் துறந்தார்

விரிவு - பக். 02

## ஜனாதிபதி மாளிகைக்குள் இரகசியப் பதுங்குகுழி

விரிவு - பக். 04

ஜனாதிபதி மாளிகைக்குள்

## மறைத்து வைக்கப்பட்ட ரூ.17 மில். மீட்கப்பட்டது

விரிவு - பக். 05

## எரிபொருள் விநியோகம் மீண்டும் ஆரம்பமானது

விரிவு - பக். 09

## ஒரு மூடை யூரியா 10 ஆயிரம் ரூபா

இன்று முதல் விநியோகம்

கொழும்பு, ஜூலை 11
இந்திய அரசால் வழங்கப்படும் யூரியா உரத்தை விவசாயி

12 ➤

கே.கே.எஸ். – முறிகண்டி

## 'யாழ்.ராணி' இன்று உலா

யாழ்ப்பாணம், ஜூலை 11
காங்கேசன்துறை – முறிகண்டி இடையேயான 'யாழ்.ராணி'

12 ➤

## '1990 அம்புலன்ஸ்' முடங்கியது!

கொழும்பு, ஜூலை 11
எரிபொருள் இன்மையால் 1990 இலவச அம்புலன்ஸ்

12 ➤

சகட்டு மேனிக்கு

## சுட்டுத்தள்ளிய இராணுவம்

காணொலியால் பரபரப்பு

கொழும்பு, ஜூலை 11
ஜனாதிபதி மாளிகையின் பிரதான வாயிலை போராட்டக்

12 ➤

யாழ். மாவட்டத்தில்

## 3 மாதங்களின் பின்னர் கொரோனாத் தொற்று

யாழ்ப்பாணம், ஜூலை 11
சாவகச்சேரியில் 72 வயதான ஒருவர் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டு, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில்

12 ➤

## அலரிமாளிகையில் மதிய உணவு

நேற்று இரவு இசைக்கொண்டாட்டம்

கொழும்பு, ஜூலை 11
போராட்டக்காரர்கள் வசம் வீழ்ந்த பிரதமரின் உத்தியோகபூர்வ வதிவிடமான அலரிமாளிகையில் நேற்று மாபெரும் சமையல் மேற்கொள்ளப்பட்டு மதிய உணவு விநியோகிக்கப்பட்டது. அத்துடன் அலரிமாளி

10 ➤

## எரிவாயு விநியோகத்தை துரிதப்படுத்துங்கள்!

தலைமறைவாகியுள்ள கோத்தாபய பணிப்பு

கொழும்பு, ஜூலை 11
3 ஆயிரத்து 700 மெற்றிக்தொன் எரிவாயு தாங்கிய கப்பல் கொழும்பை நேற்றுமாலை வந்தடைந்துள்ள

12 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சி அரசு அமைக்க அனைத்தும் தயார் நிலை

**கொழும்பு, ஜூலை 11**

**மக்கள் விடுதலை முன்னணியைத் தவிர எதிர்க்கட்சிகளின் அனைத்து பிரதான அரசியல் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைப் பெற்று சர்வகட்சி ஆட்சியை அமைப்பதற்கு பொதுவான உடன்பாட்டை எட்டியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.**

அதையடுத்து நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதலுடன் உத்தேச சர்வகட்சி அரசாங்கத்தை விரைவாக அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

அந்த அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சர் பதவிகளின் எண்ணிக்கையை 10 ஆக மட்டுப்படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

புதிய அரசாங்கத்தில் இணையும் எந்தவொரு அரசியல் கட்சியின் தலைவருக்கும் அமைச்சுப் பதவிகள் கிடைக்காது மற்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் உள்ளடக்கிய தேசிய தலைமைத்துவ சபை நிறுவப்படும்.

இந்த சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குவதற்காக தேசிய நிபுணர் குழுவொன்றும் நிறுவப்படும் மற்றும் அது கல்வியியலாளர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களைக் கொண்டதாகக் காணப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## கருஜயசூரிய மீண்டும் நாடாளுமன்றம் வர ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 11

முன்னாள் சபாநாயகர் கருஜயசூரியவை மீண்டும் நாடாளுமன்றம் வர வைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்காகத் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதற்கு மயந்த திஸாநாயக்க தயாராக இருக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி துறந்தவுடன் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இடைக்கால ஜனாதிபதியாக வேண்டும். அடுத்த 30 நாள்களுக்கு முன்பாகவே நாடாளுமன்றம், பதில் ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய வேண்டும் என்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-14-இ)



கோத்தா கோ கமவில் அமைக்கப்பட்டிருந்த நூலகத்தில் இருந்த புத்தகங்கள் நேற்று ஜனாதிபதி செயலகத்துக்கு மாற்றப்பட்டன. ஜனாதிபதி செயலகத்தில் தற்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கியிருக்கும் நிலையிலேயே நூலகம் அங்கு மாற்றப்பட்டுள்ளது. (எ)

## பொருத்தமான ஒருவரை ஜனாதிபதியாக்குங்கள்!

*ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 11

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை தற்காலிக ஜனாதிபதியாக நியமித்து நாடாளுமன்றத்தைக் கூட்டுங்கள். பின்னர் ஜனாதிபதி பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமித்து சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாகத் தமது பதவிகளை விட்டுவிலகி புதியவர்களை நியமிக்க சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினர் இந்த யோசனைகளை முன்வைத்தனர்.

இந்த யோசனைகளுக்கு பெரும்பான்மையான கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர். நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியான பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்தில் தீர்வு பெற்று உடனடியாக தேர்தலை நடத்துவதே தமது கட்சியின் நிலைப்பாடாகும்-என்றார். (எ-இ)

## அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய தம்மிக்க பெரேரா

கொழும்பு, ஜூலை 11

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரோரா தனது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளார்.

பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற பதவியில் இருந்து விலகியதை அடுத்து, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமை மூலம், கடந்த நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்த தம்மிக்க பெரேரா கடந்த 24ஆம் திகதி அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

மக்களின் போராட்டத்தால் தற்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ள நிலையில், தம்மிக்க பெரேரா தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகியுள்ளார். (எ-இ)

# பிரதமர் இன்னமும் பாடம் கற்கவில்லை

*ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கண்டனம்*

கொழும்பு, ஜூலை 11

பிரதமர் ரணிலின் வீட்டுக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களை செய்தியாக்கிக் கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கடும் கண்டனத்தைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள சிறப்பு அறிக்கையில் உள்ளதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்கு முன்பாக அரச வன்முறையைப் பயன்படுத்தி ஊடகவியலாளர்கள் நால்வரை இலக்காகக் கொண்டு அவர்கள் மீது பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் நடத்திய கொடூரமான மனிதாபிமானமற்ற தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அது மட்டுமன்றி, தாக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைக்கூட விரட்டி விரட்டி தாக்கும் அளவுக்கு பாதுகாப்புப் படையினர் மனிதாபிமானமற்றவர்களாக மாறிவிட்டனர்.

மக்களுக்கு தகவல் அறியும் உரிமையை உறுதி செய்வதற்காக நாகரிகமான ஊடகப் பயன்பாட்டில் ஈடுபட்ட மற்றும் அது தொடர்பாக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஊடகவியலாளர்கள் குழுவொன்று குறிவைக்கப்பட்டு தாக்கப்பட்டமை அதிகாரம் வாய்ந்த ஜனாதிபதியை நான்கு சுவர்களுக்குள் முடக்கி வீட்டுக்கு அனுப்பிய மக்கள் போராட்டத்திலிருந்து பிரதமர் இன்னும் பாடம் கற்கவில்லை என்பதையே இந்தக் கோழைத்தனமான தாக்குதல் உணர்த்துகிறது.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள், உத்தரவிட்டவர்கள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் - என்றுள்ளது. (ம)

# மக்கள் நம்பும் ஆட்சியை அமைக்க இடம்கொடுங்கள்

*நாடாளுமன்ற உறுப்பினர்களை கோருகிறார் பிரசன்ன ரணதுங்க*



கொழும்பு, ஜூலை 11

எமது நாடு வரலாற்றில் ஒரு முக்கியமான தருணத்தை எதிர்கொண்டுள்ளது. நாடு இந்த அவல நிலைக்கு ஆளாகியதற்கு இந்த நாட்டை 74 ஆண்டுகள் ஆண்ட அனைத்து ஆட்சியாளர்களுமே காரணம். தற்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதுடன், மக்கள் நம்பும் பிரதிநிதிகளை நியமிப்பதற்குத் தேவையான இடத்தை வழங்குவதும் எமது பொறுப்பாகும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு திறமையற்ற நிர்வாகமே பிரதான காரணமாகும். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், 69 இலட்சம் பேரின் ஆணை பெற்று தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியை, பதவியைவிட்டு வெளியேறுவதற்கு மக்களின் பலம் தாக்கம் செலுத்தியுள்ளது.

மக்களின் கருத்துக்கு தலைவணங்கி இந்த மாதம் பதின்மூன்றாம் திகதி தனது பதவியை விட்டு வெளியேறுவேன் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவித்துள்ளார். இந்தத் தருணத்தில் மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களின் பொறுப்பு மக்கள் நம்பாத போலி அறிவிப்புக்களை வழங்கக்கூடாது. தற்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதுடன், மக்கள் நம்பும் பிரதிநிதிகளை நியமிப்பதற்குத் தேவையான இடத்தை வழங்குவதும் எமது பொறுப்பாகும். அதற்கு தலைமை தாங்குவது நாடாளுமன்றத்தில் உள்ள 225 மக்கள் பிரதிநிதிகளினதும் தவிர்க்க முடியாத கடமையும் பொறுப்புமாகும்.

மக்கள் கேட்கும் சர்வகட்சி இடைக்கால அரசுக்கு இடம்கொடுப்பதே இந்த தருணத்தில் எங்களின் கடமையாகும். எண்ணெய், எரிவாயு என அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வழங்க அனைத்துக் கட்சி இடைக்கால அரசுக்கு உறுதுணையாக இருக்கும். தற்போது மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியிருக்கும் எரிபொருள், உரம், மின்சாரம், அத்தியாவசிய உணவு, பிரச்சினைகளைத் தீர்த்து, மக்கள் விரும்பும் அரசாங்கத்தை அமைப்பதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும்-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நிலவரங்கள் உன்னிப்பாக அவதானிப்பு!

## சர்வதேச நாணய நிதியம் அறிக்கை

கொழும்பு, ஜூலை 11

**இலங்கையின் தற்போதைய நிலை குறித்து மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.**

இது குறித்து சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் காரணமாக பாதிக்கப்படக்கூடிய மக்கள், குறிப்பாக ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மீது மிகவும் அக்கறை கொண்டுள்ளோம். சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க, இந்தக் கடினமான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் தெரிவிக்கின்றோம்.



நிதியமைச்சகம் மற்றும் இலங்கை மத்திய வங்கியிலுள்ள தமது பிரதிநிதிகளுடன் தொழில்நுட்ப கலந்துரையாடல்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளோம் -என்றுள்ளது. (ம)

# அமைதியை நிலைநாட்ட மக்களே ஒத்துழைப்பீர்!

## சவேந்திர சில்வா கோரிக்கை

கொழும்பு, ஜூலை 11

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு மக்களின் ஆதரவு மிகவும் அவசியமானது எனவும் அதற்காக அனைத்து இலங்கையர்களும் பாதுகாப்புத் தரப்பினருக்கு ஒத்துழைக்க வேண்டுமெனவும் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவும் நெருக்கடியை அமைதியான முறையிலும், அரசமைப்புக்கு உட்பட்ட முறையிலும் தீர்க்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இந்தத் தருணத்தில் நாட்டின் அமைதியைப் பாதுகாக்க படையினருக்கும் பொலிஸாருக்கும் தேவையான ஆதரவை பொதுமக்கள் வழங்க வேண்டுமென்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# அமெரிக்காவில் ஜனாதிபதி கோத்தாவின் மகனின் வீடு முன் போர்!

வொஷிங்டன், ஜூலை 11

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் வசித்துவரும் கோத்தாபய ராஜபக்சவின் மகனின் வீட்டுக்கு முன்பாக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியிலிருந்து விலக வேண்டுமெனக் கோரி அமெரிக்க வாழ் இலங்கையர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# புதிதாக வந்த குழு ஒன்றே ரணில் வீட்டுக்கு தீ வைப்பு

## கொழும்பு ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூலை 11

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்தை எரியூட்டிய மைக்கு போராட்டத்தில் இணைந்துக்கொண்ட புதிய குழு ஒன்றே காரணம் என்று ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து விலகக் கோரி நேற்றுமுன்தினம் மாலை முதல் பிரதமரின் இல்லத்துக்கு வெளியே சுமார் 200 பேர் கொண்ட கூட்டம் ஒன்று கூடியிருந்தது.

போராட்டக்காரர்கள் குடியிருப்பை நோக்கிச் செல்ல முயன்றபோது, பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் தண்ணீர் தாரை பிரயோகத்தை மேற்கொண்டனர். பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர், இல்லத்துக்கு வெளியே நின்றிருந்த தொலைக்காட்சியின் பல ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் மொத்தம் ஆறு ஊடகவியலாளர்கள் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதல் பற்றிய செய்தி பரவியதும், ஒரு பெரிய குழு அந்த இடத்துக்கு வந்தது. அதைத் தொடர்ந்து பிரதமரின் இல்லம் மீதும் கற்கள் வீசப்பட்டுள்ளன.

இந்தநிலையில் சம்பவ இடத்துக்கு வந்த ஒரு புதிய குழு ஏற்கனவே போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மத்தியில், பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்துள்ளது. இறுதியில் ஒரு குழு பாதுகாப்பு தடுப்புக்களை உடைத்து. இரவு 9 மணியளவில் குடியிருப்புக்கு தீ வைத்தது. தீயணைப்பு வாகனம் வந்ததும், பிரதமரின் தனிப்பட்ட இல்லத்தில் தீயை அணைக்கவிடாமல் அந்தக் குழு, தீயணைப்பு வீரர்களைத் தடுத்ததுடன், பக்கத்து வீடுகளுக்கு மாத்திரம், தீ பரவவிடாமல் இருக்க அனுமதித்தது. தீயணைப்பு வாகனமும் போராட்டக்காரர் ஒருவரின் பொறுப்பில் கொண்டு வரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இலங்கையின் நிலை மேலும் மோசமாகும்!

## மனித உரிமைகள் சட்டத்தரணி பவானி பொன்சேகா எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 11

இலங்கையின் நிலைமை மேலும் மோசமடைவதற்குரிய முகாந்திரங்கள் உள்ளன என்று கொழும்பிலுள்ள பிரபல மனித உரிமைகள் சட்டத்தரணி பவானி பொன்சேகா எச்சரித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தங்களின் கோரிக்கைகள் தொடர்ந்தும் நிறைவேற்றப்படவில்லை என்று மக்கள் கருதினால், பொருளாதார நிலை மேலும் மோசமடைந்தால் வன்முறை ஏற்படலாம் என்ற கவலை எனக்கு உள்ளது.

இலங்கையில் இது மிகவும் நிச்சயமற்ற நேரம். அத்துடன் மருத்துவ நெருக்கடியையும் நாடு எதிர்கொண்டுள்ளது. எனவே இவை வன்முறை மற்றும் வன்முறையில் விளையக்கூடிய காரணங்களின் கலவையாகும், இது மிகவும் ஆபத்தான சூழ்நிலைக்கு வழிவகுக்கும் -என்றார். (ம)

# போராட்டங்களில் 103 பேர் காயம்!

கொழும்பு, ஜூலை 11

அரசாங்கத்துக்கு எதிராக நாடெங்கிலும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது 103 பேர் காயமடைந்தனர் என்றும் அவர்களில் 55 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் மருத்துவத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்தவர்களில் 11 ஊடகவியலாளர்களும் 5 பாதுகாப்புப் படையினரும் அடங்குகின்றனர். அவர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொண்டவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. (ம)

# கோத்தாபயவுடன் தற்போது எந்தவிதத் தொடர்பும் இல்லை!

## ஞானாக்கா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் தற்போது எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று ஜனாதிபதியின் ஆஸ்தான சோதிடர் என்று கூறப்படும் அநுராதபுரத்தைச் சேர்ந்த ஞானாக்கா தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

செல்வதற்கு இடமில்லாது இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் பாதுகாப்புக் கோரினால்கூட, வீட்டுக்கு அழைக்கமாட்டேன். கோத்தாபய ராஜபக்சவின் குடும்பத்துக்கும் எனது கோயிலுக்கும் இடையிலான தொடர்பு 13 வருடத்துக்கு மேற்பட்டது.

ஜனாதிபதியாக தெரிவாகும் முன்னர் அவர் அடிக்கடி கோயிலுக்கு வந்து சென்றபோதும் ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் அவர் என்னைச் சந்திக்க கோயிலுக்கு வரவில்லை. கோத்தாபய ராஜபக்ச எனது கோயிலுக்கு வந்தது அரசியல் முடிவுகளையும் ஆலோசனைகளையும் பெறுவதற்காக அல்ல. சுகவீனம் காரணமாக நேர்த்திக் கடனுக்காக வந்தார். அரசியல்வாதிகளுக்கு கோயிலில் சேவைகளை வழங்கியமை குறித்து தற்போது வருத்தப்படுகிறேன். கோயிலும், விடுதியும் தீயில் அழிய இவை காரணமாக அமைந்தன. இப்போது கோத்தாபய ராஜபக்சவுடன் தற்போது எந்தவிதத் தொடர்புகளும் இல்லை. ஹிருணிகா பிரேமச்சந்திர வெளியிட்ட கருத்துக்கள் காரணமாக சமூகத்தில் என்னைப் பற்றி தவறான விம்பம் ஏற்பட்டுள்ளது -என்றார். (எ-இ)

# உரத்தை பொறுப்பேற்ற பின் பதவியிலிருந்து விலகுவேன்!

## மஹிந்த அமரவீர அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 11


இந்தியக் கடனுதவியின் கீழ் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட உரத்தை உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவேன் என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, பந்துல குணவர்தன, தம்மிக்க பெரேரா ஆகியோர் அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகிய நிலையிலேயே விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டகாலத் தீர்வுக்கான துரித நடவடிக்கை தேவை

## வலியுறுத்துகின்றது அமெரிக்கா



**கொழும்பு, ஜூலை 11**

**நீண்டகாலத் தீர்வுகளைக் காண்பதற்கான துரிதமான நடவடிக்கைகளில் இலங்கைத் தலைவர்கள் ஈடுபட வேண்டுமென அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இலங்கை ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறி, தனது பதவி விலகலை அறிவித்துள்ள நிலையில் அமெரிக்கா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி பதவி விலகத் தயாராகின்ற இந்த வேளையில் இலங்கை நாடாளுமன்றம் இந்தத் தருணத்தை நாட்டின் மேம்பட்ட நிலைக்கான அர்ப்பணிப்பை கருத்திற் கொண்டு செயற்படவேண்டும், தனியொரு அரசியல் கட்சியை அடிப்படையாகக் கொண்டு செயற்படக்கூடாதென அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தையோ அல்லது புதிதாக அரசமைப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படக்கூடிய அரசாங்கத்தையோ, நீண்டகாலப் பொருளாதார உறுதித்தன்மையை ஏற்படுத்தக்கூடிய தீர்வுகளை விரைவாக அடையாளம் கண்டுகொண்டு தீர்வுகளை முன்வைக்க வேண்டுமென்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பாக எச்சரித்துள்ள அமெரிக்கா, வன்முறைகள் குறித்தும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இலங்கை மக்களுக்கு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான, குரல் எழுப்புவதற்கான உரிமையுள்ளது.

ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான வன்முறைகளில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தவேண்டுமெனவும் அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ-இ)

# ஜனாதிபதி மாளிகையில் பதுங்கு குழிக்குள் அறை

கொழும்பு, ஜூலை 11

ஜனாதிபதி மாளிகை முழுமையாக போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், அங்கு பதுங்கு குழி ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பதுங்கு குழிக்குள் இரகசிய அறை இருப்பதும் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி மாளிகையிலுள்ள பிரத்தியேகக் கட்டடம் ஒன்றில் இந்த பதுங்கு குழி இருக்கின்றது எனவும் இந்தப் பதுங்கு குழிக்குள் வெவ்வேறு கதவுகள் ஊடாகவே உட்பிரவேசிக்க முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இந்தப் பதுங்கு குழிக்குள் பிரமாண்டமான பாரம் தூக்கி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தப் பதுங்கு குழியில் அடிப்பகுதியில் மிகவும் இரகசிய அறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் மிகவும் வலுவான இரும்பு கதவுகளால் திறக்க முடியாத அளவுக்கு இந்த இரகசிய அறை இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# ரணில் வீட்டுக்குத் தீ 3 பேர் கைதாகினர்

கொழும்பு, ஜூலை 11

கொழும்பு - கொள்ளுப்பிட்டியவிலுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் தீவைப்பு ஆகியவை தொடர்பில் மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் படையெடுத்த போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகை அதன் பின்னர் ஜனாதிபதி செயலகம் என்பவற்றைக் கைப்பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லம் அமைந்துள்ள கொள்ளுப்பிட்டிப் பகுதியை போராட்டக்காரர்கள் சூழ்ந்து கொண்டனர்.

அங்கு போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் பெரும் முறுகலும் ஏற்பட்ட நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்குள் புகுந்த குழுவினர் வீட்டைத் தாக்கி, எரியூட்டினர்.

இதுதொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் மூவர் நேற்று நண்பகல் வரையில் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-இ)

# ரணில் வீட்டுக்குத் தீ: சந்திரிகா கண்டனம்

## சர்வதேச நாடுகளும் கண்டனம்

கொழும்பு, ஜூலை 11

நேற்றுமுன்தினம் இரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லம் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டமைக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் நோர்வே மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளும் கவலை வெளியிட்டுள்ளன.

பிரதமரின் இல்லத்துக்கு தீ வைக்கப்பட்டமைக்கு பல்வேறு தரப்பினரும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். அதேவேளை, பிரதமர் வீட்டுக்கு தீ வைக்கப்பட்ட சம்பத்துக்கும் தங்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 'பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீ வைத்து எரிக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கின்றேன். ஒரு மோசமான அரசாங்கத்தை விரட்டி, மக்கள் ஆட்சியை நிலை நிறுத்துவதற்கான இலக்கை அடைய போராட்டக்காரர்களுக்கு வன்முறை தேவையில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் இல்லத்துக்கு தீ வைக்கப்பட்டமை தொடர்பில் சர்வதேசமும் கவலை வெளியிட்டுள்ளது. இலங்கைக்கான நோர்வே தூதுவர் தனது ருவிற்றர் பதிவில், 'அமைதியான போராட்டங்கள் வன்முறையாக மாறி, பிரதமர் இல்லம் எரிக்கப்பட்டுள்ளமை கவலைக்குரியது. எந்தச் சூழலிலும் வன்முறையை நியாயப்படுத்த முடியாது. வன்முறை விரிவடைவதைத் தடுக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறோம். போராட்டக்காரர்கள் சட்டத்தை தங்கள் கைகளில் எடுக்கவேண்டாம்.' என்று குறிப்பிட்டுள்ளார்.

'வன்முறை, பொது மற்றும் தனியார் சொத்துக்களை அழிப்பது நியாயமற்றது. இலங்கையில் இதுபோன்று பொது ஒழுங்கை மீறுவது நாட்டின் பிரச்சினைகளை ஆழமாக்குகிறது. இது உலகெங்கிலும் உள்ள பல நாடுகளை பாதிக்கிறது. தேசிய ஒற்றுமை மற்றும் சர்வதேச உதவி மூலம் மட்டுமே தீர்வுகள் கிடைக்கும்' என ஆப்கானிஸ்தான் தூதுவர் ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (எ-இ)

### ரணிலின் வீடு எரிக்கப்பட்ட வேளை

# மின்தடைப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்

கொழும்பு, ஜூலை 11

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சொந்தமான வீடு எரிக்கப்பட்ட சம்பவத்தின்போது, குறித்த வீட்டிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மின்சாரம் தடைப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுமென இலங்கைப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ரணிலின் வீடு எரிக்கப்பட்டவேளை அந்த நேரத்தில் திட்டமிடப்பட்ட மின்வெட்டு எதுவும் இல்லை என்றும், அந்த நேரத்தில் மின்சாரம் எப்படி துண்டிக்கப்பட்டது என்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என்றும் இலங்கைப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ம-14-இ)

# ரணிலின் வீடு எரிக்கப்பட்டமைக்கு சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

கொழும்பு, ஜூலை 11

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சொந்தமான வீடு எரிக்கப்பட்டமைக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் வெடித்த பெரும் போராட்டத்தின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சொந்தமான வீடு எரிக்கப்பட்டது. இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே பொதுமக்களை வன்முறையில் ஈடுபடவேண்டாம் எனக் கோரிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், ஏனையவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அனுமதிக்கவேண்டாமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ம-14-இ)



ஜனாதிபதி செயலகத்தைச் சூழவுள்ள பகுதிகள் நேற்றுக்காலை இளைஞர்களால் சுத்தம் செய்யப்பட்டன. அதேவேளை, ஜனாதிபதி பதவியில் இருந்து கோத்தாபய ராஜபக்ச விலகும் வரையில் ஜனாதிபதி செயலகத்தை விட்டு விலக மாட்டோம் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வேரோடு பிடுங்கும்வரை ஓயக்கூடாது

நேற்று முன் தினம், ஜூலை 9 இல் கொழும்பில் ஏற்பட்ட மக்கள் புரட்சியில் ஜனாதிபதி மாளிகையும், ஜனாதிபதி செயலகமும் கைப்பற்றப்பட்ட சமயம், தப்பித்தோடியபோதே கோத்தாபயவின் மணிமுடி ஏறக்குறைய சரிந்துவிட்டது. எந்த மக்களுக்காக, தமிழினத்தை அடக்கி, இனப்படுகொலை செய்து, போரை முடிவுக்கு கொண்டுவந்தாரோ அதே இனமக்களால் கோத்தாபய தூக்கியெறியப்பட்ட போதே – 'கோத்தா கோ ஹோம்' போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதே – அவர் பதவியில் இருந்து விலகியிருந்தால், மக்களின் குறைந்தபட்ச நன்மதிப்பையாவது தக்கவைத்திருக்கலாம். ஆனால், பதவிவெறி அவரை கெட்டியாகப் பிடித்திருந்தது. 'தோற்றுப்போன ஜனாதிபதியாக பதவி விலக மாட்டேன்'என்றவரை, மக்கள் அவமானப்படுத்தி, ஓட ஓட விரட்டியடித்து, தலைமறைவாகப் பதுங்கச் செய்துவிட்டார்கள். இதைவிட அவர் தோற்றுப்போன ஜனாதிபதியாகவே விலகியிருக்கலாம். இப்போது எலியைப் போல வளைக்குள் பதுங்கியிருக்கும் தருணத்தில் கூட , உடனடியாகத் தன் பதவியை உதற அவர் தயாராகவில்லை. ஜூலை 13 இல் தான் ( ஞானாக்கா குறித்துக் கொடுத்த நல்லநாளோ தெரியவில்லை) பதவி விலகுவேன் என்று சபாநாயகரூடாக அறிவித்திருக்கிறார். இப்படி ஒரு கால அவகாசத்தை கோத்தாபய கோரியிருப்பது, சிலபல சந்தேகங்களை மக்களிடையே உண்டுபண்ணியிருக்கிறது.

கோத்தாபயவின் வாக்குறுதிப்படி , இன்னும் இருநாள்களில் அவர் தனது ஜனாதிபதி என்ற தகுதியை இழந்துவிடுவார். ஆனால், கோத்தாபயவின் விலகலோடு ராஜபக்ச குடும்பத்தின் ஆதிக்கத்துக்கு முடிவுகட்டப்பட்டுவிடும் என்று அவ்வளவு அலட்சியமாகவும் இருக்கமுடியாது. ஏனெனில் ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த மஹிந்த, நாமல், சமல் ஆகியோர் இன்னமும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே உள்ளனர். அத்தோடு நாடாளுமன்றில் பெரும்பான்மை ஆசனங்களைத் தன்னகத்தே வைத்திருக்கும் பொதுஜன பெரமுன கட்சியின் கடிவாளம் பஸில் ராஜபக்சவின் கைகளை விட்டு விலகவில்லை.


தங்கள் சாம்ராஜ்ஜித்தின் மீது விழுந்த மரண அடிக்கு பதிலடி கொடுக்க ராஜபக்ச குடும்பம் புதிய வழிகளை, புதிய தந்திரங்களை இனிவரும் நாள்களில் கைக்கொள்ளக்கூடும். நல்லாட்சிக் காலத்தில் ஆட்சியதிகாரம் இல்லாத நிலையில் கூட, எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தைக் கூட பெற்றிராத மஹிந்த அணி, அரசாங்கத்தை எவ்வளவுதூரம் ஆட்டிப்படைத்தது என்பதையும், அடுத்த தேர்தலுக்கான முன் தயாரிப்புகளில் எவ்வாறு பலமான வியூகங்களோடு செயற்பட்டது என்பதையும் ஒட்டுமொத்த நாடே அறியும். இப்போது முன்னரைவிடவும் ராஜபக்ச குடும்பத்தின் அத்தனை அதிகாரங்களும், பெரும்பான்மைச் சிங்கள மக்களாலேயே துண்டிக்கப்பட்ட நிலையில், அடிபட்ட சிங்கம் போல, தங்கள் ரணங்களை எப்படி ஆற்றிகொள்ளமுடியும் ? எப்படி இனி ஆட்சியைப் பிடிக்க முடியும் ? என்ற வழிகளைக் கண்டிப்பாக ராஜபக்சக்கள் தேடத் தொடங்கியிருப்பர்.

கோத்தாபய தன் பதவி விலகலுக்கான சிலநாள் அவகாசத்தை – ஜூலை 13 வரை – கோரியிருப்பது ராஜபக்சக்களின் தந்திரங்களில் ஒன்றாகக் கூட இருக்கலாம். இந்தச் சிலநாள் அவகாசத்தில் ஏதேனும் தகிடுதத்தங்களை அவர்கள் செய்யக்கூடும். ராஜபக்சக்களின் அத்தனை ராஜதந்திரங்களும் தோற்றுப்போய், ஏற்கனவே உறுதியளித்தபடி கோத்தாபய ஜூலை 13 இல் பதவி விலகினாலும் கூட, அதன் பின்னர் இலங்கையைத் தலைநிமிர அந்தக் குடும்பம் அனுமதிக்கப் போவதில்லை. தங்கள் எம்.பி பதவியையும், கட்சியிடம் இருக்கும் பெரும்பான்மைப் பலத்தையும் வைத்து, தற்போதைய நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்காக முன்வைக்கப்படும் திட்டங்களை குழப்பவே செய்வர். நாடு தலைநிமிர்ந்தால், இத்தனை நாள் அவலத்துக்கும் தாமே காரணம் என்ற உண்மை பட்டவர்த்தனமாகிவிடுமே. எனவே எவ்வளவு முடியுமோ, அந்தளவுக்கு நாட்டை இன்னும் குழப்புவார்கள். அத்தோடு, தங்களிடம் இருக்கும் பெரும் பணப்பலத்தை வைத்து, அடுத்த தேர்தலிலும் அதிகாரத்தைக் கைப்பற்ற ராஜபக்சக்கள் முடிந்தளவு போராடவே செய்வர். எனவே மக்களின் புரட்சி தனி ஒரு நபரை மட்டும் ஆட்சியதிகாரத்தில் இருந்து அகற்றுவதோடு ஓய்ந்துவிடக்கூடாது. ராஜபக்சக்களும், அவர்களின் விசுவாசிகளும், அவர்களின் கட்சிக்காரர்கள் அத்தனை பேரும் செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்கும் வரை மக்களும் போராட வேண்டும். ராஜபக்சக்கள் கூண்டோடு இல்ங்கை அரசியலில் இருந்து அகற்றப்பட்டால், அது ஏனைய அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடமாக அமையும். அதன் பின் அவர்கள் மக்கள் நலனுக்கு விரோதமான செயல்களிலோ, ஊழல்களிலோ, சொத்துச் சேர்ப்பதிலோ ஈடுபடாமல், ஓரளவுக்கேனும் நல்லதொரு ஆட்சியை வழங்க முற்படுவர். எனவே ராஜபக்ச குடும்பம் என்ற நச்சுக் களையின் இலையை மட்டும் பறிப்பதோடு நின்றுவிடாமல், அதனை வேரோடு பிடுங்கி எறியும்வரை மக்கள் போராட்டம் ஓயக்கூடாது.

நாளொரு நல்வார்த்தை

ஒரு மனிதன் மிருகத்தைக்
கொன்றால் அது வீரம்.
மிருகம் ஒரு மனிதனைக்
கொன்றால் அது பயங்கரம்.

- பெர்னாட்ஷோ.



# சர்வாதிகாரிகளின் தலைவிதி கோத்தாபயவுக்கும் நேர்ந்தது

## அநுரகுமார வெளிப்படைப் பேச்சு



**கொழும்பு, ஜூலை 11**

**உலகின் ஏனைய சர்வாதிகாரிகளின் தலைவிதியைப் போன்று நாட்டிலிருந்து தப்பிச்செல்ல வேண்டிய நிலை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் ஏற்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

நேற்றுமுன்தினம் இரவு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மக்களின் விருப்பத்துக்கு பணிந்து, தலைமறைவாக இருந்து தனது அதிகாரத்தைப் பாதுகாக்க முயன்ற கோத்தாபய ராஜபக்ச உலகின் ஏனைய சர்வாதிகாரிகளின்தலைவிதியைப்போன்று தப்பிச்செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.
இந்த ஜனநாயகப் பொதுப் போராட்டத்தின் உண்மையான சாராம்சத்தைப் புரிந்துகொண்டு, கொள்ளையடிக்கப்பட்ட செல்வத்தை நாட்டிலிருந்து மீட்டெடுக்கவும், நியாய்மான விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்குத் தண்டனை வழுங்கவும் வெற்றியை நோக்கி அதனை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியையும் மேற்கொண்டுள்ளேன் - என்றார். (ம)

# ஜனாதிபதி மாளிகையில் 17 மில்லியன் ரூபா மீட்பு

கொழும்பு, ஜூலை 11
கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையின் அறையொன்றில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்களால் 17 மில்லியன் ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி மாளிகையில் உள்ள இரகசிய அறையொன்றின் அலுமாரியில் இருந்து இந்தப் பணத்தொகை மீட்கப்பட்டது. ஜனாதிபதி மாளிகைக்குள் நேற்றுமுன்தினம் பிரவேசித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று இந்தப் பணத்தை மீட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. கிடைத்த பணத்தை அவர்கள் எண்ணி ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்புக்கு பொறுப்பான அதிகாரி ஒருவரிடம் ஒப்படைத்துள்ளனர்.
இதுதொடர்பில், பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்; ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இவ்வாறு பணம் பெறப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர். பணத்தின் அளவு மற்றும் எந்த நோக்கத்துக்காகப் பணம் அங்கு வைக்கப்பட்டது என்பது குறித்த சரியான தகவல்களை ஆராய்ந்த பின்னர் மேலதிக விடயங்கள் தெரிவிக்கப்படும் - என்றார். (ம)

நாளை 12.07.2022 செவ்வாய்க்கிழமை ஆனி 28

சுபநேரம் : 10.29 - 11.59
ராகுகாலம்: 02.59 - 04.29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றுக்கு வெளியே மக்கள் அதிகாரப் பேரவை!

## முன்னிலை சோஷலிஸக் கட்சி ஆலோசனை

**கொழும்பு, ஜூலை 11**

**நாடாளுமன்றத்துக்கு வெளியே மக்களின் அதிகாரத்தை பிரதிநிதித்துப்படுத்தும் பேரவை உருவாக்கப்பட வேண்டும் என முன்னிலை சோஷலிஸக் கட்சியின் தலைவர் குமார் குணரட்னம் தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் முன்னிலை சோஷலிஸக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிததுள்ளதாவது:- நாட்டுக்குள் உடனடியாக அரசியல் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு வருடத்துக்குள் புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படவேண்டும். புதிதாக எவர் ஆட்சியமைத்தாலும் அவர்கள் போராட்டக்காரர்களுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். இந்தச் சந்தர்ப்பமானது மக்கள் அரசமைப்புச் சட்டத்துக்கும் நடைமுறையில் உள்ள சட்டத்துக்கும் அப்பால் சென்று அமைதியான முறையில் தமது இறையாண்மை அதிகாரத்தை உறுதிப்படுத்திய சந்தர்ப்பம்.

2019ஆம் ஆண்டு பல்வேறு அரசியல் சதித்திட்டங்கள் மூலம் 69 லட்சம் வாக்குகளைப் பெற்று பதவிக்கு வந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை மக்கள் விரட்டியுள்ளனர். மறுபுறம் அவருக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருந்தது. 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் முக்கியமான அரசியல் அதிகாரங்களைப் பெற்றிருந்தார்.

சர்வாதிகாரத்தை நோக்கியும் மிக மோசமான சமூகப் பொருளாதார நெருக்கடிக்கும் நாட்டைக் கொண்டு சென்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்க நாட்டு மக்கள் தமது பலத்தைப் பயன்படுத்திய சந்தர்ப்பம். இது இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமுனை என்பது போலவே உலக வரலாற்றிலும் மிக முக்கியமான திருப்புமுனை - என்றார். (எ-இ)



## சிப்பாயைத் தாக்கிய சந்தேகநபர் கைது!

கொழும்பு,ஜூலை 11

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சிப்பாயைத் தாக்கிய குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி இரத்தினபுரி- எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையாற்றிய சிப்பாய் ஒருவரைப் பொதுமகன் தாக்கி அவரின் துப்பாக்கி யைக் கொள்ளையடிக்க முற்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் எம்பிலிப்பிட்டிய கசேய பகுதியில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எம்பிலிப்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-14-இ)

## அரசாங்கத்துக்கு எதிராக போராடச் சென்ற நபர் விபத்தில் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 11

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற நபர் விபத்தில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் மாத்தறை நகரில் இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த இளைஞர் வான் ஒன்றுடன் மோதியதில் உயிரிழந்தார். மாத்தறை, திஹாகொட பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே விபத்தில் உயிரிழந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## ஆஸி. செல்லமுயன்ற 67 பேர் கைதாகினர்!

மட்டக்களப்பு, ஜூலை 11

சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 67 பேர் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சுற்றிவளைப்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 11 சிறுவர்களும் 6 பெண்களும் அடங்குகின்றனர். கைதுசெய்யப்பட்டவர்கள் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். படகின் செலுத்துநர் மற்றும் முகவர் இருவரையும் தவிர ஏனையோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். முகவரும் செலுத்துநரும் எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

## கொழும்பின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு பணிப்பு




கொழும்பு, ஜூலை 11

கொழும்பில் பாதுகாப்பை, வீதித் தடைகள் அமைத்துப் பலப்படுத்த வேண்டும் என்று மேல் மாகாணத்தின் அனைத்துப் பொலிஸ்மா அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

மேல்மாகாண பிரதான பொலிஸ்மா அதிபர் நேற்று மேல் மாகாணத்தின் அனைத்துப் பொலிஸ்மா அதிபர்களையும் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக தொடர்புகொண்டு கலந்துரையாடியபோதே, மேற்கண்ட உத்தரவையும் வழங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

தற்போது ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரிமாளிகையை ஆக்கிரமித்து போராட்டம் நடத்துபவர்கள் தொடர்பில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

அதேவேளை, பாதுகாப்புச் செயலாளர் மற்றும் மேல்மாகாண பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கட்டுநாயக்க பிரதேசத்தில் உள்ள விடுதியில் தங்கியிருந்து இந்த உத்தரவுகளை வழங்குகின்றனர் என்று பொலிஸ் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## ஆசிரியருக்கான கடிதம்

### சூழல் நேயம்மிக்க நேமி மின்உற்பத்தி



இன்று நாம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் எரிபொருள் நெருக்கடி முதலிடத்தில் உள்ளது. இந்த நிலையில் எம்மிடம் உள்ள இயற்கையிடம் இருந்து எரிபொருளை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழர் தாயகம் கடலால் சூழப்பெற்றது. கடந்த காலங்களிலும் சரி தற்போதும் சரி எமது கடல் வளம் பற்றிய கல்வியை எமது சமூகம் முழுமையாக அறியவில்லை. எங்களை வழிகாட்டியவர்கள் இயற்கையிடம் இருந்து கற்றுக் கொள்ளுங்கள் என்பதை எமக்குக் கற்றுத் தந்துள்ளனர். அந்தவகையில் எம்மைச் சூழ உள்ள கடலில் சக்தி அலையாக உள்ளது. சங்கத் தமிழில் கடலை நேமி என்பர். எனவே கடலிலிருந்து உருவாக்கக் கூடிய சூழல் நேயம்மிக்க பேண்தகு மின் உற்பத்தியை நேமி மின் வலு என அழைக்கலாம்.

ஓர் இனம் தனது தாயகத்தில் தனது இருப்பைத் தக்க வைப்பதற்கு சுதேச வளங்களின் செம்மையான பயன்பாடு மிகவும் இன்றியமையாதவை. தற்போது உள்ள எரிபொருளுக்கான வரிசைகள் இதனை எமக்கு மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றன. நவீன தொழில்நுட்ப ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்ட இரண்டு வகையான நேமி மின் முதல்களை நாம் எமது தாயகத்தில் பயன்படுத்தலாம்.

முதலாவது பிரயோசனமாக ஆழ்கடல் நீரோட்டங்களில் இருந்து மின்னை உற்பத்தி செய்யும் ஆழியின் மின் முதல்களாக அமையும். இவை மிதவைகளால் ஆழ்கடலுக்குள் நிலை நிறுத்தப்பட்டு ஆழ்கடலில் இயங்கும். சக்கரங்கள் மூலம் மின் உற்பத்தி செய்யப்படும். யாழ். குடாநாட்டில் நெடுந்தீவுக்கும் நயினாதீவுக்கும் இடையிலான கடற்பரப்பு, அனலைதீவுக்கும் எழுவைதீவுக்கும் இடையிலான கடற்பரப்பு, பருத்தித்துறை- கற்கோவளம், நாகர்கோவில், ஆழியவளை போன்ற இடங்களில் இந்தத் திட்டத்தை செயற்படுத்தலாம். இவை எமக்குத் தேவையான அனைத்து எரிசக்தித் தேவையையும் பூர்த்தி செய்யக்கூடிய நேமி மின் முதல்களாக அமையும்.

இரண்டாவது நேமி மின் முதல்களாக ஆழிப் பட்டங்கள் என்கின்ற ஆழ்கடல் மின் உற்பத்திப் பட்டங்களின் பிரயோகங்கள் அமையும். இதனை திருகோணமலை, மூதூர் கடற்பிரதேசங்களில் உபயோகிக்கலாம். தமிழர் தாயகத்தை ஒளிமயமாக்குவதற்கு நேமி மின்வலு நிலையங்கள் காத்திரமானவையாக அமையும்.

**மருத்துவர் சி.யமுனாநந்தா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org


















# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** செயல்களில் இழுபறியான நிலை உண்டாகும். மனக்குழப்பம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். அமைதி காப்பது நன்மை தரும். வியாபாரத்தில் கவனம் தேவைப்படும்.

**இடபம்:** திருமண பேச்சு சாதகமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். விரும்பிய வகையில் செயற்பட்டு மகிழ்வீர்கள். உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும். புதிய பணியில் ஈடுபடுவீர்கள்.

**மிதுனம்:** எதிர்ப்பு விலகும். குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலை ஆள்களை மாற்றுவீர்கள். வருமானத்தில் இருந்த தடை அகலும்.

**கடகம்:** குடும்பப் பிரச்சினை தீரும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். புதிய முயற்சி அனுகூலமாகும். விலகிச்சென்ற உறவுகள் மீண்டும் வருவர். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபத்தைக் காண்பீர்கள்.

**சிம்மம்:** உங்களுக்கு விருப்பமான ஒருவரை இன்று சந்திப்பீர்கள். நினைத்ததை சாதிப்பீர்கள். வியாபார நுணுக்கங்களைத் தெரிந்துகொண்டு செயற்படுவீர்கள். ஆதாயம் அதிகரிக்கும்.

**கன்னி:** சொத்துப் பிரச்சினை உங்களுக்கு சாதகமாகும். உங்கள் செயல்கள் லாபமாகும். உங்களின் திறமை வெளிப்படும். துணிச்சலாகச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள்.

**துலாம்:** இரண்டு நாளாக இருந்து வந்த சங்கடம் விலகும். மகிழ்ச்சி கூடும். தம்பதியர் இடையே ஏற்பட்ட பிரச்சினை விலகும். கோயில் தரிசனம் மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதில் தேவையற்ற சிந்தனை உண்டாகும். எதிர்பார்ப்பு இழுபறியாகும். சிலர் உங்களைக் குறை சொல்வார்கள். அதற்கு பதில் சொல்லவேண்டாம். குடும்பத்தினர் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**தனுசு:** தொழில் முன்னேற்றம் கருதி நீங்கள் எடுக்கும் முயற்சி லாபமாகும். நிதி நெருக்கடி விலகும். எதிர்பார்த்த பணம் இன்று வந்து சேரும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**மகரம்:** நீண்ட நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரை இன்று சந்திப்பீர்கள். புதிய பொறுப்பு வந்து சேரும். பிறர் பாராட்டும்படி செயற்படுவீர்கள். முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்:** பொது நலனில் கவனம் செல்லும். உங்களின் செல்வாக்கு உயரும். கூட்டு வியாபாரத்தில் ஆதாயம் கூடும். புதிய முயற்சி மேற்கொள்வீர்கள்.

**மீனம்:** இரண்டு நாளாக இருந்து வந்த நெருக்கடி விலகும். மனநிம்மதி உண்டாகும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளாக திட்டமிட்டிருந்த வேலையை செய்வீர்கள்.



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ண[illegible]லிங்கேஸ்வரர் ஆலய சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா ஆகியன பல பக்தர்கள் சூழ அண்மையில் சிறப்பாக இடம்பெற்றன. (ம-14)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 11

ஊர்காவற்றுறை-நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயிலில் நாவலர் ஆண்டில் நடத்தும் மாதாந்த 'பௌர்ணமி விரதகால' சிறப்புச்சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நாவலர் குருபூசையைத் தொடர்ந்து தலைமையுரையை சிவகாந்தனும், சிறப்புச்சொற்[illegible] வழிபாடும்' [illegible]ப்புலவர் ச.நவநீதனும் ஆற்றவுள்ளனர். (ம-14)



# இலங்கையின் கடற்பரப்புகள் கொந்தளிப்புடன் காணப்படும்

கொழும்பு, ஜூலை 11

இலங்கையின் கடற்பரப்புகள் இன்று கொந்தளிப்பாகக் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மேல் மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளில் இருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளத்தில் இருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோர கடற்பரப்பு மற்றும் காலியில் இருந்து மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோர கடற்பரப்பு ஆகியவற்றில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது - என்றுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 25 . 01 . 1951 |  | 08 . 07 . 2022 |

## திருமதி செல்வராணி கதிரமலை

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசாவிளான், திருநெல்வேலி, கோண்டாவில் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி கதிரமலை அவர்கள் கடந்த (08.07.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவனடியார் மகாலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற தம்பையா பூலோகம் தம்பதியரின் அன்பு மருமகளும், வசாவிளான் கதிரமலை அவர்களின் அன்பு மனைவியும், தயாளினி, கணேசமூர்த்தி (பிரான்ஸ்), சிவகௌரி (ஆசிரியை, யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தா, சரவணபவானந்தன்,சத்தியநாதன் (மோகன்-கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவபாக்கியம் (சங்கானை) மற்றும் சிவக்கொழுந்து (பூநகரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2022) திங்கட்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**366/8, 01ஆம் ஒழுங்கை,
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு
(ஐயப்பன் கோவில் அருகில்)**

**தகவல்: குடும்பத்தினர்.
0777 238597
0764 20 7927**

# மரண அறிவித்தல்

| தாயின் மடியில் | | இறைவன் அடியில் |
|---|---|---|
| 04 - 04 - 1961 |  | 10 - 07 - 2022 |

## அம்பிகைபாகன் மகேந்திரன்

கே.கே.எஸ் வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அம்பிகைபாகன் மகேந்திரன் அவர்கள் நேற்று (10.07.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், பராசக்தி, அம்பிகாதேவி, Dr.சகுந்தலாதேவி (சிரேஸ்ட விரிவுரையாளர், உடற்கூற்றியல் துறை, மருத்துவப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), பரமேஸ்வரி (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரகுமாரசுவாமி, நிர்மலன் ஆகி யோரின் மைத்துனரும் காலஞ்சென்ற நிர்மலதாஸ் மற்றும் மோகனா - குணசீலன் (ஆவுஸ்ரேலியா), நிர்மலகுமார் - உதயபானு (கோபுரம் அலுமினிய தொழிற்சாலை- இணுவில்), தர்சினி - சிவநாதன் (மல்லாகம்), பாமா - தவசீலன் (லண்டன்), பூமா - ஜங்கரன் (ஜேர்மனி), மேனகா - வசீகரன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், கீரன், பவித்திரா, கிருஸ்வின், தனிசிகா, தாணியா, தியானா, அஜீனா, ஆரபி, வைணவி, சோபியா, மெலினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை

**021 205 9891** (CS 19952 ) (3/6) தகவல்: குடும்பத்தினர்

# சோமாலியாவில் கடும்வறட்சி துருக்கியிடம் உதவிகோரல்!



அங்கரா, ஜூலை 11

சோமாலியாவில் கடும் வறட்சி நிலவுவதை அடுத்து, அந்த நாடு துருக்கியிடம் அவசரமாக உதவி கோரியுள்ளது.

சோமாலிய அதிபர் ஹசன் ஷேஷ் முகமது முதல் முறையாகத் துருக்கிக்குப் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார். அங்கு அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

"சோமாலியாவில் நிலவும் கடும் வறட்சி குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது. துருக்கிய சகோதரர்கள் எங்களுக்கு உறுதுணைபுரிய வேண்டும்.

அவர்கள் முன்பு செய்த உதவிகளைப்போல, அவர்களால் முயன்ற உதவியை செய்யவேண்டும். உங்களது ஆதரவு சோமாலிய மக்களின் உயிர்களைக் காப்பாற்றும். நான் இந்த உதவியை என்றும் மறக்க மாட்டேன்" - என்றார்.

(ம)

# மரண அறிவித்தல்



## நாகபூசணி யோகநாதன்

அளவெட்டி கும்பழாவளை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகபூசணி யோகநாதன் அவர்கள் நேற்று (10.07.2022) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பசுபதி கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகநாதனின் அன்பு மனைவியும், கணேசரட்ணம் (லண்டன்) அவர்களின் அன்புச் சகோதரியும், சகுந்தலா (கனடா), சாந்தினி (கனடா), சங்கீதா (ஆசிரியர் யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவபாதன் (கண்ணன்-கனடா), நிசாகன் (கனடா), பிரதீபன் (ஆசிரியர் யா/அருணோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும், கர்ணன், கிருஸ்ணி, டிசானி, குபேரா, நிலாவன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.07.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். (CS 8625) 1/2

# சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையம்
## மனித உரிமைகள் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையமானது சமூகத்தில் மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் தன்னிச்சையாக செயற்படக்கூடிய மனித உரிமை பாதுகாவலர்களை உருவாக்கும் நோக்கில் மனித உரிமை தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியினை நடாத்த உள்ளது. குறித்த கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- சனி, ஞாயிறுமற்றும் விடுமுறை தினங்களில் வகுப்புக்கள் நடைபெறும்.
- ஆறுமாதத்திற்கான கற்கைநெறி.
- வகுப்புக்கள் இணையவழியிலும் (on-line) நேரடியாகவும் நடைபெறும்.

### விண்ணப்பிப்பதற்கான அடிப்படை தகைமைகள்

- க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், ஆங்கிலத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

### விண்ணப்பிக்கும் முறை

- மனித உரிமை செயற்பாடுகளில் ஆர்வம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- சுயவிபர கோவையை தபால் மூலமாகவோ / மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.
- விண்ணப்ப முடிவு திகதி 15.07.2022.

### மேலதிகதொடர்புகளுக்கு

தொ.பே இல. : 0212241494
மின்னஞ்சல் : lhrchumanrightsunit@gmail.com
முகவரி : No.64 Temple Road, Jaffna.

தபால் சேவையினூடாக விண்ணப்பிக்க முடியாதவர்கள் தொலைபேசியூடாகத் தொடர்பு கொள்வதன் மூலம் தங்களது விபரங்களைப் பதிவு செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிக விலையில் டீசலை விற்பனை செய்தவர் கைது

வவுனியா, ஜூலை 11
வவுனியாவில் அதிக விலையில் டீசலை விற்பனை செய்த நபர் ஒருவரைப் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.
வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, வவுனியா - பட்டானிச்சூர் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். 31 வயதான குறித்த நபர் 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் டீசலை விற்பனை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-14-18)

# எரிபொருள் தீர்ந்ததால் நடுவீதியில் பேருந்து

## பயணிகள் அந்தரிப்பு

திருகோணமலை, ஜூலை 11
இலங்கைப் போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்து ஒன்று பயணித்துக் கொண்டிருந்தவேளை எரிபொருள் தீர்ந்ததால் வீதியில் பயணிகளுடன் நின்றுள்ளது.
இந்தச் சம்பவம் திருகோணமலை - கிண்ணியா பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
கந்தளாயில் இருந்து கிண்ணியா நோக்கிப் பயணித்த பேருந்து தம்பலகாமம் - கிண்ணியா பிரதான வீதியில் பயணிகளை ஏற்றிச் சென்ற வேளை டீசல் தீர்ந்து நின்றுள்ளது.
அதன்பின்னர் கிண்ணியா இ.போ.ச சாலையிலிருந்து டீசல் பெறப்பட்டு, பேருந்து மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இதனால் சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக பயணிகள் காத்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-14)

## ஐ.ஓ.சியில்

# எரிபொருள் வழங்கல் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 11
லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையங்களில் நேற்று 10ஆம் திகதி முதல் எரிபொருள் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.
திருகோணமலையில் அமைந்துள்ள லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்துக்குச் சொந்தமான எரிபொருள் களஞ்சிய முனையம் 24 மணிநேரமும் இயங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை- நாடு முழுவதுமுள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களையும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக கடந்த 8ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் மூடுவதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# தேர்த்திருவிழா


சாவகச்சேரி, ஜூலை 11
சாவகச்சேரி - கல்வயல் பெருங்குளம் வீரகத்தி விநாயகர் கோயில் மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. அத்துடன் தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் என்றும் ஆலய நிர்வாகசபை அறிவித்துள்ளது. (ம-14-9)

# சுகாதாரத்துறை அடுத்தவாரம் முழுவதுமாகச் செயலிழக்கும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 11
**மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத்துறையினரின் போக்குவரத்துப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் அடுத்த வாரத்தில் இருந்து முழு சுகாதாரச் சேவையும் முடங்கும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் தர்ஷன சிறிசேன தெரிவித்துள்ளதாவது:-
இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதில் பெரும் சிக்கல் நிலைமை தோன்றியுள்ளது. சுகாதார ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி முறையான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம்.
நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தற்போதைய அரசாங்கத்தால் முடியாது எனத் தோன்றுகிறது. அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுவான வேலைத்திட்டத்துக்கு ஒன்றிணைவது இந்தத் தருணத்தில் மிகவும் முக்கியமானது. நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு அனைத்து அரசியல் கட்சிகளும் நாட்டைப் பற்றிச் சிந்தித்து பொதுவான வேலைத் திட்டத்துக்கு ஒன்றிணைந்து செயற்படவேண்டும் -என்றார். (எ-இ)



# ஜனாதிபதி செயலகத்தில் காலி கிரிக்கெட் ஆட்டம்!

கொழும்பு, ஜூலை 11
ஜனாதிபதி செயலகத்தில் முகாமிட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள், அங்கிருந்தவாறு காலியில் இடம்பெறும் அவுஸ்திரேலியா எதிர் இலங்கை அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் ஆட்டத்தைத் தொலைக்காட்சியில் பார்வையிட்டு வருகின்றனர்.
ஜனாதிபதி முறைப்படி பதவி விலகலை அறிவிக்கும் வரையில் ஜனாதிபதி செயலகத்தை விட்டுச் செல்லமாட்டோம் என்று அறிவித்துள்ள அவர்கள் அங்கு பல்வேறுபட்ட கேளிக்கை நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். இதன் ஒருபகுதியாகவே அவர்கள் மேற்படி கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்வையிட்டு வருகின்றனர். (ம)

# ஜனாதிபதி செயலகத்தில் இளைஞர்கள் கேளிக்கை

கொழும்பு, ஜூலை 11
ஜனாதிபதி செயலகத்தைக் கைப்பற்றியுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள், ஜனாதிபதி செயலகத்துக்குள் செய்த பல வேடிக்கையான விடயங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.
ஜனாதிபதியும், அரசாங்கமும் விலகும் வரையில் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வெளியேற மாட்டோம் என்று தெரிவித்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கேயே முகாமிட்டுள்ளனர்.
அங்கு அவர்கள் நீச்சல் குளத்தில் குளித்தமை, உணவு சமைத்து உண்டமை என பல விடயங்கள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றனர்.
ஜனாதிபதி செயலகத்தில் வேடிக்கையான விவாதம் ஒன்று நடத்தப்பட்டது. போராட்டக்காரர்கள் இணைந்து ஜனபதி அதிகாரிகளுடன் விவாதம் நடத்துவது போன்று நடத்தப்பட்ட அந்த விவாதத்தின் காணொலி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.
அதேவேளை, ஜனாதிபதி செயலகத்தைப் பார்வையிடுவதற்காக பெரும் எண்ணிக்கையான மக்கள் ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்வதையும் அவதானிக்க முடிந்தது. (எ-இ)

# சஜித்தை பிரதமராக நியமிப்பதே முறை!

## ராஜித சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 11
நாடாளுமன்ற ஜனநாயகத்தின்படி ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகும்போது, மாற்று பிரதமராக எதிர்கட்சித் தலைவரே நியமிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
ஜனாதிபதி இன்று இங்கு இல்லை. பிரதமரும் இல்லை. எனவே மாற்றுப் பிரதமராக எதிர்க்கட்சித் தலைவரே நாட்டின் ஜனநாயகத்தின்படி நியமிக்கப்பட வேண்டும். உலக நாடுகளில் தலைவர்கள், சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் இங்கு வந்தால் பிரதமரையும் எதிர்க்கட்சித் தலைவரையுமே சந்தித்துவிட்டு செல்கிறார்கள். மது எதிர்க்கட்சித் தலைவருடன் இணைந்து, அவரது தலைமையில், தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காணுவோம் -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோத்தா...

கொழும்பு கோட்டையிலுள்ள இலங்கை ஆசிரியர் சங்க காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார். (அ-ஒ-இ)

## அடுத்த...

ஐக்கிய மக்கள் சக்தியைப் பொறுத்த வரையில் அந்தக் கட்சி நேற்று நடத்திய கூட்டத்தில், ரணில் விக்கிரமசிங்கவை ஒருபோதும் ஆதரிப்பதில்லை என்ற முடிவை உறுதியாக எடுத்தது. அத்துடன் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவி விலக அந்த வெற்றிடத்துக்கு கரு ஜயசூரியாவை நியமித்து அவரை ஜனாதிபதி பதவிக்கு முன்மொழியலாம் என்று ஆராயப்பட்டுள்ளது.
அதேவேளை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சாலிய பீரிஸையும் அவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினராக்கி அவரை ஜனாதிபதி பதவிக்கு முன்மொழியலாம் என்றும் கலந்துரையாடப்பட்டுள்ளது.
சிறிலங்கா பொதுஜன பெரமுனவைப் பொறுத்தவரையில் அவர்கள் வசம் பெரும்பான்மை உள்ளதால் டலஸ் அழகப்பெருமவை ஜனாதிபதி பதவிக்கு முன்மொழியத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது. (அ-ஒ-5)

## கட்சித்...

யாப்பா அபேவர்தன தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.
பதில் ஜனாதிபதி ஒருவரை நியமித்தல் மற்றும் சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்குதல் என்பன தொடர்பில் இதன்போது ஆராயப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதேவேளை - பல கட்சிகள் நேற்றையதினம் இரகசியக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளன. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது. அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதேவேளை - ஜே.வி.பியும் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்துள்ளது. (அ-ஒ-இ)

## தலையைச்...

செய்து வருகின்றனர். இதன்போது அங்கு கைப்பற்றப்பட்டுள்ள பொருள்கள் பெரும் மலைப்பை ஏற்படுத்தியுள்ளன.
ஜனாதிபதிக்கான காலை, மதிய, இரவு உணவு தொடர்பான 'மெனு கார்ட்டும்' போராட்டக்காரர்கள் வசம் சிக்கியுள்ளது. அதனை சமூக ஊடகங்களில் பதிவிட்டு,



மக்கள் ஒரு நேர உணவுக்கே போராடும் நிலையில் ஜனாதிபதி ஒரு நேர உணவுக்கே பல ஆயிரம் ரூபாவைச் செலவு செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளனர்.
அதேபோன்று ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி தங்கியிருந்ததாக நம்பப்படும் அறையிலிருந்து புதிய சேர்ட் ஒன்றையும் போராட்டக்காரர்கள் மீட்டுள்ளனர். அதன் பெறுமதி 179 டொலர் என்று சேர்ட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனையும் சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளனர்.
இதேபோன்று ஜனாதிபதி மாளிகையில் சுமார் 30 க்கும் மேற்பட்ட சொகுசு கார்களையும் போராட்டக்காரர்கள் கைப்பற்றியுள்ளனர். (அ-ஒ-5)

## கைப்பற்றிய...

கட்டடத்திலிருந்தும் வெளியேறப் போவதில்லை. அதேபோன்று மக்களை ஏமாற்றும் சர்வகட்சி அரசாங்கத்தையும் ஏற்கப் போவதில்லைஎன்றுகாலிமுகத்திடல்ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.
நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் காலிமுகத்திடல் ஆர்ப்பாட்ட ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான வசந்த முதலிகே இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-
மக்கள் போராட்டத்தால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அவரவர் பதவிகளிலிருந்து விலக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் பதவி விலகுவதற்கு கால அவகாசம் கோரியுள்ளனர். மக்களின் எதிர்ப்பையும் மீறி ஏதேனுமொரு வகையில் பதவியில் நீடிப்பதற்கு கோத்தாபய முற்படுவாராயின் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.
கோத்தாபய பதவி விலகிய பின்னர் ரணில் விக்கிரமசிங்க 5 நாள்களேனும் ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்கு முயற்சித்தால் அதற்கும் நாம் இடமளிக்கப்போவதில்லை. அதேபோன்று மக்களை ஏமாற்றும் சர்வகட்சி அரசாங்கத்தையும் நாம் ஏற்கப்போவதில்லை. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தீர்வு திட்டங்களை நாம் ஏற்கனவே முன்வைத்துள்ளோம். அதன்படி செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (அ-ஒ-இ)

## சுற்றுலாத்தலங்களாக...

சுற்றுலாத்தலங்களாக மாறியுள்ளன. நேற்றையதினம் பல ஆயிரக்கணக்கான மக்கள் இவற்றைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இதேவேளை - ஜனாதிபதி மாளிகைக்கு அதிகளவான மக்கள் வருவதால், அங்கு வரவேண்டாமென்றும் ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரிமாளிகைக்குச் செல்லுமாறு 'கோத்தா கோ கம' போராட்ட ஏற்பாட்டாளர்களில் ஒருவரான அநுர பண்டாரா கோரிக்கை விடுத்துள்ளார்.

**கும்மாளம்**

ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரிமாளிகையை நேற்றுமுன்தினம் கைப்பற்றியதிலிருந்து போராட்டக்காரர்கள் அங்கு கும்மாளம் அடித்து வருகின்றனர். அதனை பெருமளவானோரும் பார்வையிட்டு வருகின்றனர். உயர் பாதுகாப்பு வலயமான பிரதேசத்தில் அவை அமைந்திருந்தமையால் பொதுமக்கள் சாதாரணமாக அங்கு நுழைய முடியாது. இந்த நிலையில் போராட்டக்காரர்கள் கைப்பற்றிய பின்னர் அனைவரும் அதனைச் சென்று பார்வையிடுகின்றனர்.
ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரிமாளிகையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இருந்த கதிரைகள், கட்டில்கள் என்பனவற்றில் தாமும் இருந்து செல்பிகளை எடுக்கின்றனர். அங்குள்ள நீச்சல் குளத்தில் குளித்து கும்மாளம் அடிக்கின்றனர். அங்குள்ள கலந்துரையாடல் மேசைகளிலிருந்து தாமும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.
ஜனாதிபதி தங்கியிருந்ததாக நம்பப்படும் அறையின் கட்டிலில் படுத்திருந்து கட்டிப் புரண்டு சண்டை போடுவதைப் போல் (ரெஸ்லிங்) காணொலிகள் எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளனர். (அ-ஒ-5)

(தொடர்புடைய செய்தி உள்ளே)

## அலரிமாளிகையில்...

கையில் நேற்று இரவு மாபெரும் இசைக்கொண்டாட்டமும் இடம்பெற்றது. அலரிமாளிகை நேற்றுமுன்தினம் மாலை போராட்டக்காரர்கள் வசமானது. அதன் பின்னர் அங்கு பெருமளவானோர் சென்றிருந்தனர். நேற்றுமுன்தினம் இரவு அலரிமாளிகையில் பெருமளவு போராட்டக்காரர்கள் தங்கியிருந்தனர்.
இந்த நிலையில் நேற்றுக்காலை அலரிமாளிகையைத் துப்புரவு செய்யும் பணியில் இளையோர் ஈடுபட்டனர். ஒரு குழுவினர் அலரிமாளிகையைப் பார்வையிட வருபவர்களுக்கும், அங்கு தங்கியுள்ளவர்களுக்கும், போராட்டக்காரர்களுக்குமான சமையலை மேற்கொண்டனர். மதியம் அனைவருக்கும் உணவு பரிமாறப்பட்டது. (அ-ஒ-5)




## மரண அறிவித்தல்



தோற்றம் 14 - 01 - 1951

மறைவு 10 - 07 - 2022

**திருமதி கமலாம்பிகை விஜயராஜா**

(ஓய்வு பெற்ற முகாமையாளர்– நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்)

யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை விஜயராஜா நேற்று (10.07.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-மதியாபரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி சங்கரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விஜயராஜாவின் அன்பு மனைவியும் சறோஜினிதேவி, வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாந்தகுமார் (இரத்த வங்கி-யாழ்.போதனா வைத்தியசாலை),சயந்தினி, றஜீவன் (முகாமைத்துவ உதவியாளர், சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெகதீஸ்வரி, சிறீஸ்கந்தராஜா, சஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சதுர்விகன், சாத்விகன், ஹர்ஷினி, உமேஷ், ஆதித்யன், அபிஷன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.161 பாற்பண்ணை வீதி திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (11.07.2022) திங்கட்கிழமை பிற்பகல் 01.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.161 பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி

077 873 6934 (மகன்)
077 410 8272 (மகள்)

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 06 . 1934

மறைவு 10 . 07 . 2022

**மயில்வாகனம்(மயிலு) கதிரவேலு**

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் (மயிலு) கதிரவேலு அவர்கள் நேற்று (10.07.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் (மயிலு) தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மாணிக்கம் (அன்னலட்சுமி) அவர்களின் பாசமிகு கணவரும், அமரர் இர்ரசமணி, பரமேஸ்வரி, பீதாம்பரம், திருக்கேதீஸ்வரி (பாப்பா), அமரர் இராமநாதன், அமரர் செல்வராசா, சுப்பிரமணியம் (ரவி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.07.2022) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

M.S.வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
சகோதரர் சுப்பிரமணியம் (ரவி)
077 1833469

(CS 19953)1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நெருக்கடியை பொறுத்திருந்து பார்ப்போம்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 11
இப்போது இலங்கையில் அவர்கள் சொந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முற்பட்டுள்ளார்கள். எனவே அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டுமென இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்ததாக பி.பி.சி. செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நாங்கள் இலங்கைக்கு மிகவும் ஆதரவாக இருக்கிறோம். அந்த நாட்டுக்கு நாங்கள் உதவ முயற்சிக்கிறோம், அவர்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் நாங்கள் எப்போதும் மிகவும் உதவியாக இருக்கிறோம். தற்போதைக்கு இலங்கை அகதிகளின் நெருக்கடி எதுவும் இந்தியாவுக்கு இல்லை' என்று தெரிவித்துள்ளார்.


இதே விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வெளியிட்டுள்ள அறிக்கையில், ' இலங்கைக்குத் தேவையான எல்லா உதவிகளையும் இந்தியா வழங்க வேண்டும். இலங்கையில் உருவாகி வரும் அரசியல் சூழ்நிலையை காங்கிரஸ் கட்சி கவலையுடன் கவனித்து வருகிறது. கடுமையான நெருக்கடி நிலவும் இந்தத் தருணத்தில் இலங்கை மற்றும் அதன் மக்களுக்கு காங்கிரஸ் கட்சி தனது ஆதரவை வெளிப்படுத்துகிறது. இந்தச் சூழலை இலங்கையர்களால் சமாளிக்க முடியும் என்று நம்புகிறேன். தற்போதைய சூழ்நிலையின் சிரமங்களைக் கையாள்வதில் இலங்கை மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இந்தியா தொடர்ந்து உதவி செய்யும் என்று நாங்கள் நம்புகிறோம்' என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பி.பி.சி. தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

(அ-ஒ-இ)

# தமிழ் எம்.பிக்களே! ஒன்றுகூடிப் பேசுங்கள்; நல்ல முடிவெடுங்கள்!

### வரலாற்றுத் தவறிழைத்திட வேண்டாம்
### ஆறு.திருமுருகன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 11
சகல தமிழ்க் கட்சிகளும் குறிப்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விரைவில் ஒன்றுகூடி இன்றைய இலங்கை அரசியல் சூழலில் நாம் எடுக்கவேண்டிய தீர்மானம் என்ன என்பதை சீராகத் தீர்மானிப்பதற்கு முன்வாருங்கள் - இவ்வாறு துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில், வடக்கு, கிழக்கு, மலையகம், தெற்கு என அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி வேறுபாடுகளைக் கடந்து மக்களுக்காக ஒன்று கூடவேண்டிய தருணம் இது. எனவே அறிவு பூர்வமாக தீர்க்க தரிசனத்தோடு ஒன்றுகூடி ஆராயுங்கள். இது காலத்தின் கட்டாயம். இவ்வேளை நீங்கள் ஒன்றுகூடி ஆராய மறுப்பீர்கள் ஆனால் அது மாபெரும் வரலாற்றுத் தவறாகும். எங்களுக்குள் பலவாகப் பிரிந்து வெறுங்கையோடு நின்ற வரலாற்றை மாற்றி, பொருத்தமான தீர்மானங்களை எடுக்க ஆயத்தமாகுங்கள். ஆட்சியைத் தீர்மானிக்கப் போகும் எவருடனும் பெறுமதியான தீர்மானத்தை முன் வைப்பதற்கு ஒன்று கூடுங்கள். உங்களை மக்கள் மிக அவதானத்தோடு காத்திருக்கிறார்கள். இன்று ஒன்றுபடாவிடில் என்றும் உங்களால் பயன் கிட்டுவது எளிதல்ல. தமிழ் மக்கள் சார்பில் எந்த அரசியலும் இல்லாத பொது மகனாக இவ்வேண்டுகோளை விடுகிறேன்-என்றுள்ளது. (அ-ஒ-இ)

### இலங்கை அரசாங்கத்தின்
# நிர்வாக மாற்றத்துக்கு ஒத்துழையுங்கள்

### கட்சிகளிடம் ஐரோப்பிய ஒன்றியம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 11
சகல அரசியல் கட்சிகளும், சமாதானத்துடனும், ஜனநாயக ரீதியிலுமான சட்டபூர்வமானதொரு அரச நிர்வாக மாற்றத்தை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென ஐரோப்பிய ஒன்றியத்தின் பேச்சாளர் நபிலா மஸ்ராலி ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார். இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமையைச் சீரமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது சகல கட்சிகளின் தலைவர்களினதும் பொறுப்பாகும் என்பதை உணர்ந்தும் செயற்படவேண்டும். அத்துடன் இலங்கைக்கு இயலுமான மேலதிக உதவி மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்குவது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-ஒ-இ)

# தாக்குதலிருந்து தப்பித்த விமல்

சுயாதீன அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, பெலவத்தை பகுதியில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துக் கொண்டிருந்த போது தனிநபர் ஒருவரால் அச்சுறுத்தப்பட்டுள்ளார். குறித்த நபர், விமலை வசை பாடியதுடன், தாக்குவதற்கு முயன்ற போது அவ்விடத்தில் இருந்து தனது சொகுசு ஜீப்பில் ஏறி விமல் தப்பித்துச் சென்று விட்டார்.

(அ-ஒ-இ)

# இலங்கையரின் துயரில் பங்கேற்பு

### பாப்பரசர் 'ருவிற்'

கொழும்பு, ஜூலை 11
அரசியல் மற்றும் பொருளாதார உறுதியின்மை காரணமாக பெரும் துன்பத்தை அனுபவிக்கும் இலங்கை மக்களின் துயரத்தில் தாமும் பங்குக்கொள்வதாக பாப்பரசர் போப் பிரான்ஸிஸ் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

(அ-ஒ-இ)

### இடைக்கால அரசாங்கத்தில்
# பங்காளியாக மாட்டோம்; வெளியிலிருந்து ஆதரவு!!!

### தமிழ்க் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட் தலைவர் சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

சரியானதொரு இடைக்கால அரசாங்கம் அமையுமாக இருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியில் இருந்து ஆதரவு வழங்கலாம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்குமா என்பது தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வகட்சி அரசாங்கத்தில் கூட்டமைப்பு பங்கேற்பது தொடர்பில் இதுவரை கூட்டமைப்பு பங்காளிக் கட்சிகளிடையே முறையான கலந்துரையாடல் நடைபெறவில்லை.

நாம் சர்வகட்சி அரசாங்கத்தில் பங்காளியாகாமல் வெளியில் இருந்து ஆதரவு வழங்கலாம் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயம்.

நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். அதற்காக சரியானதொரு சர்வகட்சி அரசாங்கம் அமையவேண்டும். அதற்காக நாம் அவர்களுடன் பங்காளிகளாக முடியாது - என்றார்.

(அ-ஒ-5)

# ரயில் கட்டண அதிகரிப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 11
நேற்று நள்ளிரவிலிருந்து நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்ட ரயில் கட்டணத் திருத்தம் பிற்போடப்பட்டுள்ளது. ரயில் கட்டணத் திருத்தம் தொடர்பில் காணப்படும் சட்டரீதியான சிக்கலே, பிற்போடுவதற்கான காரணம் என ரயில்வே நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

(அ-ஒ-இ)

# இராணுவத் தலைமையகத்தில் ஜனாதிபதி கோத்தா தங்கவைப்பு?

### இந்திய ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூலை 11
ஜனாதிபதி மாளிகையிலிருந்து கடந்த 8ஆம் திகதி இரவு வெளியேறிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, இராணுவத் தலைமையகத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாக அரச உயர்மட்டத்தை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை - கடந்த 8ஆம் திகதி இரவின் பின்னர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எங்கே தங்கியுள்ளார் என்ற உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

(அ-ஒ-இ)

# பொலிஸ் காவலரண் அடித்து நொருக்கல்!

வவுனியா, ஜூலை 11
வவுனியா - பூந்தோட்டம் பொலிஸ் காவலரண் இனந்தெரியாதவர்களால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்ததுடன், அந்தச் சந்தர்ப்பத்தில் பொலிஸார் எவரும் காவலரணில் கடமையில் ஈடுபட்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தனர். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதப்போரில் எங்களை முடிந்தால் வெல்லுங்கள்!

## மேற்கத்திய நாடுகளுக்கு புடின் சவால்

**மொஸ்கோ, ஜூலை 11**
**உக்ரைனில் இடம்பெற்றுவரும் ஆயுதப் போராட்டத்தில், முடிந்தால் எம்மை வென்றுகாட்டுமாறு மேற்கத்திய நாடுகளுக்குச் சவால் விடுக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் ரஷ்ய அதிபர் புடின்.**



உக்ரைனில் ரஷ்யா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை 150ஆவது நாளை எட்டவுள்ள நிலையில், உக்ரைனின் கிழக்குப் பகுதியை ரஷ்யா ஆக்கிரமித்துள்ளது. இந்த நிலையிலேயே புடின் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உக்ரைனில் போர் தொடுக்கும் எண்ணம் ரஷ்யாவுக்கு இருந்ததில்லை. ஆனால், மேற்கத்திய நாடுகள்தான் ரஷ்யாவை தோற்கடிக்க நினைக்கின்றன. கடைசி உக்ரைனியர்கள் இருக்கும்வரை மேற்கத்திய நாடுகள், ரஷ்யாவுடன் போர் புரியும் என்று மேற்கத்திய நாடுகள் கூறுவதை நாங்கள் கேள்விப்பட்டுகிறோம். முடிந்தால் போரில் எங்களை வெல்ல முயற்சி செய்யுங்கள். ஆனால், உக்ரைன் மக்களுக்குத்தான் இது பெரும் சோகம். ரஷ்யா பெரியளவில் இந்தப் போரைத் தொடங்கவே இல்லை என்பதை அனைவரும் அறிந்திருக்கவேண்டும். உக்ரைனை மேற்கத்திய நாடுகள் பயன்படுத்திக் கொள்கின்றன. ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதித்தும், உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்கியும் எங்கள் மீது மறைமுகப் போரை மேற்கத்திய நாடுகள் நடத்துக்கின்றன. இந்தச் சூழலிலும் அமைதி பேச்சுக்கு ரஷ்யா தயாராகவே உள்ளது. ஆனால், பேச்சை மறுப்பவர்கள் காலம் கடக்க கடக்க எங்களுடனான பேச்சுக்கான வாய்ப்பு கடினமாகும் என்பதை உணர வேண்டும்' - என்றார். (ம)

# தென்னாபிரிக்காவில் துப்பாக்கிச்சூடு

## 14 பேர் உயிரிழப்பு

டேர்பன், ஜூலை 11

தென்னாபிரிக்கா தலைநகரின் தென்கிழக்கேயுள்ள ஜோகன்னஸ்பர்க் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 14 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு அங்குள்ள மதுபான விடுதியொன்றில் இடம்பெற்றுள்ளது.
குறித்த மதுபானவிடுதிக்குள் புகுந்த இனந் தெரியாதோர் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 14 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 11 பேர் வரையில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அந்தநாட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

### எரிவாயு...

நிலையில், அதன் விநியோகத்தை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் நேற்றுத் தெரிவித்துள்ளது.
ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் என்பன போராட்டக்காரர்கள் வசம் நேற்றுமுன்தினம் வீழ்ந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமறைவாகியுள்ளார். இந்த நிலையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணிப்புரை விடுத்ததாக ஜனாதிபதி அலுவலக கடிதத்தின் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
இதேவேளை - நாளையும் எதிர்வரும் 16ஆம் திகதியும் தலா 3 ஆயிரத்து 700 மெற்றிக் தொன் எரிவாயு தாங்கிய 2 கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார்.
இந்த மாதத்துக்குள் 30 ஆயிரம் மெற்றிக் தொன் எரிவாயு நாட்டுக்கு கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### 3 மாதங்களின்...

சேர்க்கப்பட்டுள்ளார் என்று போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.
கடந்த 3 மாதங்களாக சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் கொரோனாத் தொற்றை அடையாளம் காண்பதற்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.
இந்த நிலையில் சாவகச்சேரியிலுள்ள தனியார் மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்டவருக்கு அன்டிஜென் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.
கொரோனாத் தொற்று இன்னமும் சமூகத்தில் உள்ள நிலையில் மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று மருத்துவர் சி.யமுனாநந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-ஒ-5)

### '1990...

சேவை நேற்று மாலை 4 மணி முதல் 83 இடங்களில் முடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டால் அதிகளவானோர் 1990 அம்புலன்ஸ் சேவையை நாடிவரும் நிலையில், இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது. (ஒ-5)

### 'யாழ். ராணி...

ரயில் சேவை இன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுகிறது என்று யாழ்ப்பாணம் ரயில்வே நிலையத் தலைமை அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்தார்.
'யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இன்று திங்கட்கிழமை காலை 6.40 மணியளவில் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு இடம்பெறும். காங்கேசன்துறை - முறிகண்டி இடையே அனைத்து ரயில் நிலையங்களிலும் நிறுத்தப்பட்டு பயணிகள் சேவையில் யாழ்.ராணி ரயில் இயக்கப்படும். தினமும் இரண்டு சேவைகள் இடம்பெறும். காங்கேசன்துறையிலிருந்து முறிகண்டி நோக்கி காலை 6 மணிக்கும், கிளிநொச்சியிலிருந்து காங்கேசன்துறை நோக்கி முற்பகல் 10 மணிக்கு சேவை ஆரம்பிக்கப்படும். அதேபோன்று மாலையில் காங்கேசன்துறையில் இருந்து முறிகண்டி நோக்கி பி.ப. 2 மணிக்கும், முறிகண்டியில் இருந்து காங்கேசன் துறை நோக்கி மாலை 4.40 மணிக்கும் யாழ்.ராணியின் சேவைகள் ஆரம்பமாகும்.
யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு ஒரு வழிக் கட்டணமாக மூன்றாம் வகுப்புக்கு 90 ரூபாவும், யாழ்ப்பாணத்திலிருந்து பளைக்கு 60 ரூபாவும் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்துக்கு 35 ரூபாவும் அறவிடப்படும் - என்றார். (அ-ஒ-இ)

**யாழ்ராணி புகையிரதம் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் நேரம்**

| காங்கேசன்துறை | சுன்னாகம் | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | அறிவியல் நகர் | முறிகண்டி |
|---|---|---|---|---|---|---|---|
| 6.00 | 06.18 | 06.40 | 07.00 | 07.12 | 07.57 | 08.05 | 08.30 |
| 14.00 | 14.08 | 14.39 | 14.59 | 15.11 | 15.56 | 16.04 | 16.10 |

காங்கேசன்துறையிலிருந்து முறிகண்டி வரை அனைத்து புகையிரத நிலையங்களிலும் நிறுத்தப்படும்

**யாழ்ராணி புகையிரதம் முறிகண்டி மற்றும் கிளிநொச்சியிலிருந்து புறப்படும் நேரம்**

| முறிகண்டி | அறிவியல் நகர் | கிளிநொச்சி | கொடிகாமம் | சாவகச்சேரி | யாழ்ப்பாணம் | சுன்னாகம் | காங்கேசன்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| | | 10.00 | 10.48 | 11.00 | 11.20 | 11.38 | 11.55 |
| 16.40 | 16.47 | 17.00 | 17.48 | 18.00 | 18.44 | 19.02 | 19.20 |

முறிகண்டியிலிருந்து காங்கேசன்துறை வரை அனைத்து புகையிரத நிலையங்களிலும் நிறுத்தப்படும்

### சுட்டுத்தள்ளிய...

காரர்கள் நெருங்கியபோது இராணுவத்தினர் சகட்டுமேனிக்கு துப்பாக்கியால் சுடும் காணொலி நேற்று வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போராட்டத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்கள், ஜனாதிபதி மாளிகையின் பிரதான வாயிலை அண்மித்திருந்தனர். அப்போது பிரதான வாயிலுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் உள்ள வீதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் போராட்டக்காரர்களை நோக்கி சகட்டு மேனிக்கு துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். போராட்டக்காரர்கள் சுவர் ஒன்றின் பின்னால் மறைந்திருந்திருந்தமையால் துப்பாக்கிச் சூட்டில் இருந்து தப்பித்தனர். இந்தக் காணொலியே நேற்று வெளியாகி பெரும்பரபரப்பை உண்டாக்கியுள்ளது.
இதேவேளை - ஜனாதிபதி மாளிகையின் பிரதான வாயிலை ஏறிக் குதித்து உள்ளே சென்ற இளைஞர், இளம் பெண் என ஒரு சிலரை பொலிஸார் கலைத்து கலைத்து மிகக் கொடூரமான முறையில் தாக்கும் காணொலியும் நேற்று வெளியாகியுள்ளது. (அ-ஒ-5)

### ஒரு மூடை...

களுக்கு உடனடியாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு மூடை உரத்தை 10 ஆயிரம் ரூபாவுக்கு விவசாயிகளுக்கு வழங்கவுள்ளதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.
இந்திய கடன் வசதியின் கீழ், ஓமானிலிருந்து யூரியா உரம் நாட்டுக்கு நேற்றுக் கொண்டு வரப்பட்டுள்ளது. நாட்டின் தற்போதைய நிலையில் தாமதம் ஏற்படுகின்றபோதிலும், கூடிய விரைவில் உரத்தை விவசாயிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கூறினார். (அ-ஒ-இ)



வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, அருகாமையில் Temple Road, சந்தியில் வீடு வாடகைக்குண்டு.
076 085 3046

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org